SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

தமிழ்

அக்டோபர் - 2018

# ZERO CURRENT AFFAIRS

## TNPSC GROUP II

**0% Effort | 100% Results**

www.tnpscthervupettgam.com

Also available @ BOOKMARK

Plot No 1742, 1st Floor, 18th Main Road, Anna Nagar West, Chennai – 600 040

**Contact : 044-43533445 | 044-45543082.**

**Centres** : Chennai - Annanagar & Adyar | Salem | Madurai | Trichy.

# அக்டோபர் 2018

## *தமிழ்நாடு*

**1)** 2018 செப்டம்பர் 30 அன்று நடைபெற்ற முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவில் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி பல்வேறு நலத்திட்டங்களைத் தொடங்கி வைத்தார்:

- **எம்.ஜி.ஆர் நெடுஞ்சாலை :** பரங்கி மலை - பூந்தமல்லி - ஆவடி நெடுஞ்சாலையானது எம்.ஜி.ஆர் நெடுஞ்சாலை (MGR Highways) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- **எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம் :** சென்னை கோயம்பேடு புறநகர்ப் பேருந்து நிலையமானது (CMBT) புரட்சித் தலைவர் டாக்டர். எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம் என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- தென் சென்னைப் பகுதியில் வசிப்பவர்களின் மருத்துவ வசதிக்காக பள்ளிக்கரணையில் புதிய மருத்துவமனை ஒன்று அமைக்கப்பட உள்ளது.
- உலகத் தரம் வாய்ந்த புதிய சர்வதேச விமான நிலையம் ஒன்று சென்னையில் அமைக்கப்பட உள்ளது.
- கிராமப்புறப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் சொந்த நிலத்திலேயே காய்கறிகள் பயிரிட்டுக் கொள்வதற்கு தமிழக அரசு உதவி செய்யத் திட்டமிட்டுள்ளது.

2) துணைக் குடியரசுத் தலைவர் வெங்கய்யா நாயுடு புதுதில்லியியீல நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் 'மூத்த குடிமக்களுக்கான தேசிய விருதினை' **(வயோஷ்ரேஸ்த சம்மன் - 2018)** தமிழ்நாட்டைச் சேர்ந்த இருவருக்கு வழங்கிச் சிறப்பித்தார்.

| **Y.G. ராஜலட்சுமி பார்த்தசாரதி** | **மூத்த குடிமகன் விருது** |
|---|---|
| **மதுரை மாவட்ட பஞ்சாயத்து, தமிழ்நாடு (மதுரையின் முன்னாள் ஆட்சியர் வீரராகவ ராவுக்கு வழங்கப்பட்டது)** | மூத்த குடிமக்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்கிய மாவட்ட பஞ்சாயத்துக்கான விருது |

3) சென்னை குரோம்பேட்டையில் உள்ள மெட்ராஸ் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் 'அரசு-தனியார் கூட்டிணைவு' (Public Private Partnership) முயற்சியின் ஒரு பகுதியாக சிமென்ஸ் & டிசைன் டெக் (Siemens & Design tech) நிறுவனத்தால் தொழில் திறன் மேம்பாட்டு நிறுவனமும் (Technical Skill Development Institute) நிபுணத்துவ மையமும் (Centre for Excellence) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

4) சென்னையிலுள்ள நான்கு மெட்ரோ இரயில் நிலையங்களில் மின் உற்பத்திக்காக சூரிய மின் உற்பத்தித் தகடுகள் (Solar Panels) பொருத்தப்பட்டுள்ளன. அந்த இரயில் நிலையங்கள் பின்வருமாறு:

- திருமங்கலம்
- அண்ணா நகர் கோபுர பூங்கா
- அண்ணா நகர் கிழக்கு
- ஷெனாய் நகர்

5) தென் தமிழ்நாட்டின் விளையாட்டு நகரமாக **(Sports city)** திருநெல்வேலி உருவெடுத்து வருகிறது.

6) சென்னையின் மாதவரத்தில் பல அடுக்குகள் கொண்ட பேருந்து நிலையமானது (**Multi Storeyed Bus Stand)** தொடங்கப்பட்டுள்ளது.

7) ஐந்து காவல்துறை ஊழியர்களுக்கு 'காந்தி அடிகள் காவல்துறை விருதினை' **(Gandhi Adigal Police Medal)** வழங்க தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி உத்தரவிட்டுள்ளார்.

8) 'போஷான் அபியான்' திட்டமானது தற்போது தமிழ்நாட்டிலுள்ள 11 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. விரைவில் இத்திட்டமானது எஞ்சியுள்ள 21 மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது.

9) சென்னை வண்டலூரில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் **வண்ணத்துப் பூச்சிகளுக்கான பூங்காவானது** (Butterfly Park) தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

## தேசம்

1) விபத்தில் காயமுற்றவர்களைக் காப்பாற்றி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிக்ச்சையளித்து உதவி செய்பவர்களுக்கு சட்டத்திலிருந்து பாதுகாப்பு அளிக்க கர்நாடக அரசால் கொண்டு வரப்பட்ட நல்ல சமாரியர்களைப் பாதுகாக்கும் மசோதா 2016க்கு (**Good Samaritan Protection Bill 2016)** குடியரசுத் தலைவர் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

2) இந்தியாவின் முதலாவது புகைபிடித்தலற்ற மாநிலமாக **(Smoke Free State)** கேரளா உருவெடுத்துள்ளது.

3) இந்தியாவிலேயே முதன்முதலாக தேயிலைத் தோட்டங்களில் வேலை பார்க்கும் கருவுற்ற பெண்களுக்கு ஊதிய இழப்பீடு வழங்க அசாம் மாநில அரசு முடிவு செய்துள்ளது.

4) இந்தியாவின் முதலாவது 'மெத்தனால் சமையல் எரிவாயுத் திட்டத்தினை' அசாம் மாநிலம் அறிமுகப்படுத்தியுள்ளது.

5) இந்தியாவின் முதலாவது 'மெய்நிகர் நாணய ஏடிஎம்மானது' **(Crypto Currency ATM)** பெங்களூரு மாநகரில் தொடங்கப்பட்டுள்ளது.

6) மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சகமானது (Union Ministry of Civil Aviation) 'டிஜி யாத்ரா' (Digi Yatra) என்னும் பயணிகளுக்கான டிஜிட்டல் பயோமெட்ரிக் சரிபார்ப்பு (Biometric based digital processing of passengers) கொள்கையினை அறிமுகப்படுத்தியுள்ளது.

7) **புவிசார் குறியீடு (GI tag):**

| | |
|---|---|
| **அல்ஃபோன்சா மாம்பழம்** | மகாராஷ்டிரா |
| **ஷாஹி லிட்சி** | பீகார் |

8) **அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 3-ன் கீழ் அண்மைக்காலத்தில் பெயர் மாற்றப்பட்ட நகரங்கள்:**

| | |
|---|---|
| **அலகாபாத்** | பிரயாக்ராஜ் |
| **ஷிம்லா** | ஷியாமளா |

9) தேசிய மகளிர் ஆணையமானது **(National Commission for Women)** பெண்கள் தங்கள் பணியிடங்களில் எதிர்கொள்ளும் பாலியல் அத்துமீறல்களைத் தெரிவிப்பதற்காக new.metoo@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரியினை அறிமுகப்படுத்தியுள்ளது.

10) சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகமானது **(Ministry of Road Transport and Highways)** 2018 அக்டோபர் 15 அன்று இளைஞர்களுக்கான சாலைப் பாதுகாப்பு விதிகளைக் கற்பிப்பதற்கான உரிமம் வழங்கும் திட்டத்தினை **(Youth Road Saftety Learness Licence Programme)** புதுதில்லியில் தொடங்கி வைத்தது.

11) பீகாரின் பாட்னா பல்கலைக்கழக வளாகத்தினுள் கங்கை நதிக்கரையோரம் அமைந்துள்ள பகுதியில் தேசிய டால்பின் ஆராய்ச்சி மையமானது **(National Dolphin Research Centre)** அமைக்கப்பட உள்ளது.

12) மத்தியப் பிரதேச மாநிலமானது நிவாரி (Niwari) என்னும் புதிய மாவட்டத்தினை உருவாக்கியுள்ளது. அம்மாநிலத்தின் 52வது மாவட்டமான நிவாரி 2018 அக்டோபர் 1 முதல் அதிகாரப் பூர்வமாக செயல்பாட்டுக்கு வருகிறது.

13) உலகளாவிய சூரிய ஆற்றல் கூட்டமைப்பின் **(International Solar Alliance)** முதலாவது அலுவலகத்தினைப் புதுதில்லியின் பிரதமர் நிரேந்திர மோடி திறந்து வைத்தார்.

14) மத்தியப் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகமானது மலிவு விலையிலான போக்குவரத்து எரிபொருள்களின் உற்பத்தியினை அதிகப்படுத்துவதற்காக 'மலிவு விலைப் போக்குவரத்துக்கான நீடித்த மாற்று

எரிபொருள்' **(Sustainable Alternative Towards Affordable Transportation)** திட்ட த்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

15) உலகின் மிகப்பெரிய குவிமாடமானது **(dome)** புனேயின் லோனி கல்போரில் உள்ள மகாராஷ்டிரா தொழில்நுட்ப நிறுவனத்தின் உலக அமைதிப் பல்கலைக்கழகத்தில் **(Maharashtra Institute of Technology's World Peace University)** அமைக்கப்பட்டுள்ளது.

16) ஒடிசா அரசானது தனது மாநிலத்திலுள்ள கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளின் தொழிற்படிப்புக்காக நிதியுதவி அளிப்பதற்காக "நிர்மன் குசுமா" (Nirman Kusuma) என்னும் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.

17) பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினரில் உள்ள தொழில்முனைவோருக்கு உதவுவதற்காக கர்நாடக மாநில அரசானது 'உன்னதி திட்டத்தினை' **(Unnati Scheme)** அறிமுகப்படுத்தியுள்ளது.

18) தேசிய மனித உரிமைகள் ஆணையமானது **(National Human Rights Commission)** தனது வெள்ளி விழாவினை (25 ஆண்டுகள்) 2018 அக்டோபர் 12 அன்று புதுதில்லியில் கொண்டாடியது.

19) மத்திய அரசானது மக்கள் பாதுகாப்பான உணவினை உட்கொள்வதை வலியுறுத்தி 'ஸ்வஸ்த் பாரத் யாத்ரா' என்னும் தேசிய அளவிலான பிரச்சாரத்தினை உலக அளவு நாளான **(World Food Day)** அக்டோபர் 16 அன்று தொடங்கி வைத்தது.

20) 19.3 கிலோ மீட்டர் நீளம் கொண்ட இந்தியாவின் மிக நீளமான ஆற்றுப் பாலமானது அசாம் மாநிலத்தில் பிரம்மபுத்திரா நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.

21) சர்வதேச இந்தியப் பட்டுத் திருவிழாவானது (India International Silk Fair 2018) புது தில்லியில் தொடங்கியது.

22) மத்திய சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் பருவநிலை மாறுபாட்டு அமைச்சகமானது (Union Ministry of Environment, Forests and Climate Change) '**ஹரித் தீபாவளி - ஸ்வஸ்த் தீபாவளி (Harit Diwali - Swasth Diwali campaign)**' என்னும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான பிரச்சாரத்தினைத் தொடங்கி வைத்துள்ளது.

23) மத்திய அரசானது இமயமலையின் கங்கோத்ரி பனி மலையிலுள்ள நான்கு சிகரங்களுக்கு மறைந்த முன்னாள் பிரதமர் 'அடல் பிகாரி வாஜ்பாயி' அவர்களின் நினைவாக அடல் - 1, அடல் - 2, அடல் - 3 மற்றும் அடல் - 4 என்ற பெயரினைச் சூட்டியுள்ளது.

24) மும்பையிலுள்ள ‘மெட்ரோ ஐநாக்ஸ்’ **(Metro Inox)** திரையரங்கமானது மேற்கூரையிலிருந்து பெறப்படும் சூரிய ஒளியால் இயங்கும் (Rooftop solar powered cinema) **இந்தியாவின் முதலாவது திரையரங்கம்** என்ற பெருமையைப் பெறுகிறது.

25) **‘ஒருமைப் பாட்டுக்கான சிலை’ (Statue of Unity – World’s Tallest Statue)** என்று அழைக்கப்படும் சர்தார் வல்லபாய் பட்டேலின் சிலையினை பிரதமர் நரேந்திர மோடி 2018 அக்டோபர் 28 அன்று திறந்து வைத்தார். உலகிலேயே மிகவும் உயரமான சிலையான இது குஜராத்தில் நிறுவப்பட்டுள்ளது.

| **உயரம்** | **182 மீ (597 அடி)** |
|---|---|
| **அணை** | சர்தார் சரோவர் அணை |
| **நதி** | கெவாடியா காலனியின் நர்மதை ஆறு |
| **நகரம்** | வடோதரா |
| **தீவு** | சாது பேட் தீவு |
| **சிற்பி** | ராம்.வி சுடர் |

## *சர்வதேசம்*

1) ஹாங்காங், மக்காவ், ஜுஹாய் ஆகிய நகரங்களை இணைக்கும் 55 கிலோ மீட்டர் நீளம் கொண்ட உலகிலேயே மிகவும் நீளமான கடல்பாலத்தினை **(World’s longest sea bridge)** சீனா திறந்து வைத்துள்ளது.

2) ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் **(UN Human Rights Council)** இந்தியா உறுப்பு நாடாகத் தேர்தெடுக்கப்பட்டுள்ளது. 193 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ.நா. பொதுச் சபையின் இரகசிய வாக்கெடுப்பில் ஆசிய-பசிபிக் பிரிவில் 188 வாக்குகளைப் பெற்ற இந்தியா, பங்கேற்ற அனைத்து நாடுகளையும் விட அதிகமான வாக்குகளைப் பெற்றிருந்தது.

3) பல்துறை வளர்ச்சிக்காக டெல்லி மற்றும் மாஸ்கோ நகரங்களுக்கிடையே ‘இரட்டை நகரங்கள் ஒப்பந்தமானது’ **(Twin city)** கையெழுத்தானது.

4) மலேசிய அரசானது அனைத்து வகையான குற்றச் செயல்களுக்கும் மரண தண்டனையை முற்றிலுமாக ஒழித்துள்ளது.

5) Paytm நிறுவனமானது **“Paypay”** என்னும் கைபேசி பணப்பையை **(Mobile Wallet)** ஜப்பானில் அறிமுகப்படுத்தியுள்ளது.

6) சர்வதேச நாட்டியத் திருவிழாவானது **(International Dance Festival)** 2018 அக்டோபர் 21 அன்று குவாலியரில் நடைபெற்றது.

7) இரண்டாவது சர்வதேச திரைப்பட விழாவானது அசாமின் குவஹாத்தியில் நடைபெற்றது. இதன் கருத்துரு: **“வசுதைவ குடும்பகம் (Vasudhaiva Kutumbakam)”.**

8) உலகின் மிகப்பெரிய ஒரே கூரையின் கீழ் அமைந்துள்ள விமான நிலையமானது **(largest airort ‘under one roof’)** இஸ்தான்புல் நகரில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

## *மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள்*

| மாநாடுகள் | நோக்கம்/கருத்துரு | நடைபெற்ற இடம் | நாள் |
|---|---|---|---|
| **நான்காவது இந்திய சர்வதேச அறிவியல் விழா** 2018 **(IISF 2018)** | “மாற்றத்திற்கான அறிவியல்” (Science for Transformation) | லக்னோ, உத்தரப் பிரதேசம் | 2018, அக்டோபர் 5 - 8 |
| **இரண்டாவது புதுப்பிக்கத்தக்க ஆற்றல் முதலீட்டு மாநாடு மற்றும் கண்காட்சி (REINVEST - 2018)** | உலக அளவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களின் உபயோகத்தினைப் பெருக்கவும் உலகளாவிய முதலீட்டாளர்களை இந்தியப் பங்குதாரர்களுடன் இணைக்கவும் இம்மாநாடானது உறுதி பூண்டுள்ளது. | நொய்டா, உத்திரப்பிரதேசம் | 2018, அக்டோபர் 3 - 5 |
| ➢ 12வது **ஆசிய-ஐரோப்பிய மாநாடு (ASEM Summit)** | “உலகளாவிய சவால்களுக்கான சர்வதேச கூட்டாளிகள்” (Global partners for Global Challenges) | ப்ரஸ்ஸல்ஸ், பெல்ஜியம் | 2018, அக்டோபர் 18 |
| 27**வது அணுக்கரு இணைவு மூலம் பெறப்படும் ஆற்றலுக்கான மாநாடு (27th Fusion Energy conference)** | அணுக்கரு இணைவு மூலம் ஆற்றலைப் பெறுவதில் உள்ள இயற்பியல் மற்றும் தொழில் நுட்ப சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்காக புதுமையான வழிமுறைகளைப் பற்றி விவாதிப்பதற்கான தளமாக இம்மாநாடு உள்ளது. | காந்தி நகர், குஜராத் | 2018 அக்டோபர் 22-27 |
| **பவளப் பாறைகளின் பாதுகாப்பு மற்றும் அவற்றின் நிலை பற்றிய சர்வதேச மாநாடு (STAP COR - 2018)** | “Reef for Life” | பங்காரம் தீவுகள், லட்சத் தீவுகள் | 2018 அக்டோபர் 22-24 |
| **இந்தியா, ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் இடையிலான முதலாவது முத்தரப்பு மாநாடு** | சாபஹார் துறைமுகத்தின் மூலம் இம்மூன்று நாடுகளுக்கிடையே போக்கு வரத்து தொடர்பினை உருவாக்க ‘சாபஹார் துறைமுகத்துக்கான ஒத்துழைப்புக் குழுவினால்’ (Coordination Council of Chabahar Agreement) இந்த முத்தரப்பு மாநாடானது நடத்தப்பட்டது. | டெஹ்ரான், ஈரான் | 2018 அக்டோபர் 23 |
| **ஆரம்பநிலை சுகாதாரத்துக்கான** | ❖ இம்மாநாடானது கஜகஸ்தான், உலக சுகாதார நிறுவனம் (WHO) | அஸ்தானா, கஜகஸ்தான் | 2018 அக்டோபர் |

| | | | |
|---|---|---|---|
| **இரண்டாவது சர்வதேச மாநாடு (2nd International Conference on Primary Health care)** | மற்றும் UNICEF ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் ஏற்படுத்தப் பட்டதாகும்.<br>❖ இம்மாநாடானது அஸ்தானாவின் சுதந்திர அரண்மனையில் (Palace of Independence) நடைபெற்றது.<br>❖ அனைவருக்குமான பொது சுகாதாரத்தை (Universal Health care) உறுதி செய்தல் மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்குகளை (SDG) 2020-ம் ஆண்டுக்குள் அடைதலே இதன் நோக்கமாகும்.<br>❖ **அஸ்தானா பிரகடனம் :** மருத்துவம் என்பது பெயரளவில் மட்டும் இல்லாமல் அனைவருக்குமான மருத்துவமாக அமைய வேண்டும். (Nov. Just the health but affordable health for all)<br>❖ **கருத்துரு** : ஆரம்ப நிலை சுகாதாரத்தின் எதிர் காலம் (The future of Primary Health Care). | | 25-26 |
| **இரண்டாவது இந்திய கைபேசி மாநாடு (2nd India Mobile Congress)** | "புதிய டிஜிட்டல் வரம்புகள் இணை உருவாக்கு. புத்தாக்கம் செய்" (New Digital Horizons, connect, Create, Innovate.) | புதுதில்லி | 2018 அக்டோபர் 25-27 |
| **13வது இந்தியா ஜப்பான் வருடாந்திர மாநாடு** | இரண்டு நாடுகளுக்குமிடையேயான உறவானது மேம்பாடு அடைந்து "சிறப்பு வாய்ந்த யுக்திசார் மற்றும் உலகளாவிய கூட்டமைப்பாக" (Special strategic and global partnership) உருவெடுத்துள்ளது. | ஜப்பான் | 2018 அக்டோபர் 28-29 |

## *2018 அக்டோபரில் நடைபெற்ற இராணுவப் பயிற்சிகள்*

| பயிற்சியின் பெயர் | பங்கேற்ற நாடுகள் | பயிற்சியின் வகை | நடைபெற்ற இடம் | நாள் |
|---|---|---|---|---|
| **இப்சாமார்- VI (IBSAMAR-VI)** | இந்தியா, பிரேசில் & தென் ஆப்ரிக்கா | பலதரப்பு கூட்டுக் கடற்பயிற்சி | சிமன்ஸ் நகரம் (Simons Town) தென் ஆப்ரிக்கா | 2018, அக்டோபர் 2 அன்று தொடங்கியது |
| **சஹ்யோக் HOP TAC - 2018** | இந்தியா-வியட்நாம் நாடுகளின் கடலோரக் காவல் படை | முதலாவது கூட்டு கடலோரக் காவல் படையினருக்கான பயிற்சி | சென்னைக் கடற்கரை, தமிழ்நாடு | 2018, அக்டோபர் 4 |

| | | | | |
|---|---|---|---|---|
| **மூன்றாவது ஜிம்மெக்ஸ்-18 (JIMEX -18)** | இந்தியா & ஜப்பான் | இருதரப்பு கடற்பயிற்சி | விசாகப்பட்டினம் | 2018, அக்டோபர் |
| **முதலாவது தர்ம காப்பாளர் பயிற்சி (1st Dharma Guardian)** | இந்தியா & ஜப்பான் | முதலாவது கூட்டுக் கடற்பயிற்சி | மிசோரம் | 2018, நவம்பர் 1-14 |
| **32வது இந்திய இந்தோனேசியா CORPAT-2018** | இந்தியா & இந்தோனேசியா | ஒருங்கிணைந்த கடற்கரை ரோந்துப் பயிற்சி | பெலாவன், இந்தோனேசியா | 2018, நவம்பர் 11-27 |
| **கோப் இந்தியா (Cope India)** | இந்தியா, அமெரிக்கா மற்றும் ஜப்பான் | முத்தரப்பு கூட்டு வான் பயிற்சி | கலைக்குண்டா, மேற்கு வங்கம் | 2018, டிசம்பர் |
| **Hand-in-Hand** | இந்தியா & சீனா | வருடாந்திர கூட்டு இராணுவப் பயிற்சி | சீனா | 2018, டிசம்பர் |
| **Clear Sky 2018** | உக்ரைன் & நோட்டோ (NATO) உறுப்பு நாடுகள் | பலதரப்பு கூட்டு வான் பயிற்சி | உக்ரைன் | 2018, அக்டோபர் 10-19 |
| **Iron Magic 19** | ஐக்கிய அரபு அமீரகம்(UAE) & அமெரிக்கா | கூட்டு இராணுவப் பயிற்சி | துபாய் | 2018, அக்டோபர் |
| **Druzhba III** | பாகிஸ்தான் & ரஷ்யா | கூட்டு இரு தரப்பு இராணுவப் பயிற்சி | பாகிஸ்தான் | 2018, அக்டோபர் |
| **Kamandag II** | அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் மற்றும் ஜப்பான் | கூட்டு இராணுவப் பயிற்சி | பிலிப்பைன்ஸ் | 2018, அக்டோபர் |

## *பாதுகாப்பு & விண்வெளி*

1) இந்தோனேசியாவில் நிகழ்ந்த நிலநடுக்கம் மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமி ஆகியவற்றில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகளை அளிக்க இந்தி அரசானது 'ஆபரேஷன் சமுத்திர மைத்ரியைத்' (Operation Samudra Maitri) தொடங்கியுள்ளது.

2) ஹரியானா மாநில அரசானது 'கவச்' (Kavach) என்னும் தீவிரவாத எதிர்ப்புப் படையை (Anti-Terrorist Force) உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

3) உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளும் கொண்ட இந்தியாவின் முதலாவது பிரம்மாண்டமான சொகுசுக் கப்பலான 'ஆங்ரியா' (Angriya) மும்பையிலிருந்து கோவா வரையிலான தனது முதல் பயணத்தினை 2018 அக்டோபர் 20 அன்று தொடங்கியது.

4) இந்திய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆணையமும் (Inland Waterways Authority of India) அசாம் மாநில அரசும் இணைந்து நீமாத்தி - மஜூலி தீவுகளிடையே (Neamati-Majuli) Roll on - Roll off (Ro-Ro) படகுப் போக்குவரத்து வசதியினைத் தொடங்கியுள்ளன.

5) ஆழ்கடல்களில் மூழ்கிவிட்ட நீர்மூழ்கிக் கப்பல்களை மீட்பதற்காக இந்தியக் கடற்படையானது தனது முதலாவது 'ஆழ்கடல் மீட்பு வாகத்தினை' (Deep Submergence Rescue Vehicle) செயல்பாட்டுக்குக் கொண்டு வந்துள்ளது.

6) கட்புலனாகும் எல்லைக்கு அப்பால் செயல்படும் வான்விட்டு வான் பாயும் ஏவுகணையான (Beyond Visual Range Air-to-Air Missile - Astra) அஸ்த்ராவின் பலகட்ட சோதனை முயற்சிகள் இந்திய வான் படையினரால் (Indian Air Force) 2018 செப்டம்பர் 26 முதல் அக்டோபர் 3 வரை வெற்றிகரமாகச் சோதித்துப் பார்க்கப்பட்டன.

7) இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமும் (ISRO) ரஷ்ய விண்வெளி முகமையான ராஸ்காஸ்மோஸ் (ROSCOSMOS)-ம் இணைந்து, இந்தியாவின் முதலாவது விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் திட்டமான 'ககன்யான்' (GAGANYAN) திட்டத்தில் பணியாற்றத் திட்டமிட்டுள்ளன.

8) உலகின் மிகப்பெரிய சரக்கு ஏற்றிச் செல்லும் ஆளில்லா விமானமான (World's Largest Cargo Drone) Feihong 98-னை சீனா வடிவமைத்துள்ளது.

## *அறிவியல் & தொழில்நுட்பம்*

1) இந்திய இரயில்வேயானது முன்பதிவு செய்யப்படாத பயணச் சீட்டுகளைப் (Unreservation) பதிவு செய்வதற்காக UTS செயலியினை (UTS app) அறிமுகப்படுத்தியுள்ளது.

2) முதலுதவி, ஊட்டச்சத்து தொடர்பான விஷயங்களைப் பற்றி அறிந்து கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்ட மருத்துவ உதவி செயலியான 'Medwatch' செயலியினை (Medwatch App) இந்திய வான்படையானது (Indian Air Force) அறிமுகப்படுத்தியுள்ளது, இத்தகைய முயற்சிகளை மேற்கொள்வதில் இந்திய வான்படையே முப்படைகளில் முதலிடம் வகிக்கிறது.

3) IRCTC நிறுவனமானது தனது வாடிக்கையாளர்களின் பல்வேறு சந்தேகங்களுக்கு விடையளிப்பதற்காக செயற்கை நுண்ணறிவூட்டப்பட்ட ASK திஷா (Disha-Digital Interaction to Seek Help Anytime) என்னும் சாட்பாட்டினை (Chatbot) உருவாக்கியுள்ளது.

4) புரோட்டோசோவா நோய்த் தொற்று மற்றும் 'Canine Distemper Virus' (CDV) தொற்று ஆகியவற்றிலிருந்து கிர் சரணாலயத்திலுள்ள சிங்கங்களைப் பாதுகாக்க

குஜராத் மாநில வனத்துறையானது அங்குள்ள சிங்கங்களுக்கு தடுப்பு மருந்துகளை (Vaccination) அளித்து வருகிறது. இந்த வைரஸ் நோய்த் தொற்றினால் கடந்த ஒரு மாதத்தில் 23 சிங்கங்கள் பாதிக்கப்பட்டு உயிரிழந்தன.

## புயல்கள்

| புயல்கள் (Cyclones/Typhoons/Hurricanes) | பாதிக்கப்பட்ட நாடுகள் | நாள் | புயலுக்குப் பெயரிட்ட நாடு |
|---|---|---|---|
| **லுபன் புயல் (Cyclone Luban)** | ஓமன் | 2018, அக்டோபர் 12 | ஓமன் |
| **லெஸ்லி புயல் (Hurricane Leslie)** | போர்ச்சுக்கல் & ஸ்பெயின் | 2018, அக்டோபர் 12 | |
| **டிட்லி புயல் (Cyclone Titli)** | ஒடிசா | 2018, அக்டோபர் 10 | பாகிஸ்தான் |

## பொருளாதாரம்

1) பன்னாட்டு நிதியம் (IMF), உலக வங்கி (WB) மற்றும் உலக வர்த்தக அமைப்பு (WTO) ஆகியவை கூட்டாக இணைந்து உலக அளவில் சேவைத் துறையில் தாராளமயத்தைப் புகுத்தும் நோக்கில் “வர்த்தகத்துக்குப் புத்துயிரூட்டுதல் மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சி” அறிக்கையை (Reinvigorating Trade and Inclusive Growth) வெளியிட்டுள்ளன.

2) பாரத ஸ்டேட் வங்கியானது (SBI) 2018 அக்டோபர் 31 முதல் ஒரு நாளில் ஏடிஎம்களில் எடுக்கக்கூடிய அதிகபட்ச அளவாக 20,000 ரூபாயை நிர்ணயித்துள்ளது.

3) சிட்பி வங்கியானது (SIDBI) உத்யம் அபிலாஷா (Udhyam Abhilasha) என்னும் தேசிய தொழில்முனைவோர் விழிப்புணர்வு பிரச்சாரத்தினைத் தொடங்கியுள்ளது.

4) வாஷிங்டனைச் சேர்ந்த சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனமானது (IFPRI) வெளியிட்டுள்ள உலக பசிப்பிணிக் குறியீட்டில் (Global Hunger Index) இடம்பெற்றுள்ள 119 நாடுகளின் பட்டியலில் இந்தியா 103வது இடத்தில் உள்ளது. உருகுவே இப்பட்டியலில் முதலாவது இடத்தில் உள்ளது.

5) உலகம் பொருளாதார மன்றத்தினால் (WEF) வெளியிடப்பட்டுள்ள உலகப் போட்டித்திறன் குறியீட்டில் (Global Competitiveness Index) இடம்பெற்றுள்ள 140 நாடுகளில் இந்தியா 58-வது இடத்தில் உள்ளது. இப்பட்டியலில் அமெரிக்க முதலாவது இடத்தில் உள்ளது.

6) ஆசிய வளர்ச்சி வங்கி (ADB வெளியிட்டுள்ள “**ஆசிய பொருளாதார ஒருமைப்பாட்டு அறிக்கை - 2018**”-ன் படி (Asian Economic Integration Reort 2018) 2017-ம் ஆண்டில் உலக அளவில் அதிகமான எண்ணிக்கையில் அயல் நாடுகளுக்குப் புலம்

பெயர்ந்தவர்களின் பட்டியலில் இந்தியா முதலாவது இடத்தில் உள்ளது. சீனா, வங்கதேசம் ஆகிய நாடுகள் முறையே அடுத்த இரண்டு இடங்களில் உள்ளன.

## விருதுகள்

| துறை | நோபல் பரிசு பெற்றவர்கள் | பங்களிப்பு |
|---|---|---|
| **மருத்துவம்** | ஜேம்ஸ் P. அல்லிசன் (USA) மற்றும் தசுக்கு ஹோன்ஜோ (ஜப்பான்) | நோய்த்தடைக்காப்பு மண்டலத்தின் எதிர் செயல்பாடு புற்றுநோயைக் குணப்படுத்த உதவுகிறது என்று கண்டறிந்தமைக்காக |
| **இயற்பியல்** | ஆர்த்தர் ஆஷ்கின் (USA) (விருதின் ஒரு பாதி இவருக்கு அளிக்கப்படுகிறது) | ஒளியியல் ட்வீசர்கள் (Optical tweezer) மற்றும் உயிரியல் துறையில் அதன் பயன்பாடு குறித்த ஆய்வு |
| | ஜெரார்டு மவுரவ் (பிரான்சு) மற்றும் டோன்னா ஸ்ட்ரிக்லாந்து (கனடா) ஆகிய இருவரும் விருதின் மறுபாதியைப் பங்கிட்டுக் கொள்கின்றனர் | அதிக செறிவுமிக்க மிகக் குறுகிய ஒளியியல் துடிப்புகளை உருவாக்கியதற்காக |
| **வேதியியல்** | பிரான்சிஸ் H. அர்னால்ட் (விருதின் ஒரு பாதி இவருக்கு வழங்கப்படுகிறது) | என்சைம்களின் இலக்கு நோக்கிய பரிணாமத்தைப் பற்றிய ஆராய்ச்சிக்காக |
| | ஜார்ஜ் P. ஸ்மித் மற்றும் கிரிகோரி P. வின்டர் (விருதின் மறுபாதியை இவர்கள் பகிர்ந்து கொள்கின்றனர்) | |
| **அமைதி** | டெனிஸ் முக்வேகே (ஈராக்) மற்றும் நாடியா முராத் (காங்கோ) | போர்க்குற்றங்களைக் கட்டுப் படுத்துவதில் இவர்கள் ஆற்றிய பங்களிப்புக்காக |
| **பொருளாதாரம்** | வில்லியம் D. நார்தாஸ் & பால் M. ரோமர் | பருவநிலை மாறுபாட்டை பெருநிலைப் பொருளாதாரத்துடன் (Macro economics) இணைத்து ஆராய்ச்சி மேற்கொண்டதற்காக |

2) **ஸ்வச் சர்வேக்ஷன் கிராமீன் விருதுகள்** 2018

| முதலிடத்திலுள்ள 3 மாநிலங்கள் | முதலிடத்திலுள்ள 3 மாவட்டங்கள் |
|---|---|
| **ஹரியானா** | சதாரா - மகாராஷ்டிரா |
| **குஜராத்** | ரேவாரி - ஹரியானா |
| **மகாராஷ்டிரா** | பெடப்பள்ளி - தெலுங்கானா |

3) தென் கொரியா அரசினால் வழங்கப்படும் மதிப்புக்குரிய சியோல் அமைதிப் பரிசு 2018 ஆனது **(Seoul Peace Prize 2018)** இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது.

4) 'Milkman' என்ற புத்தகத்தினை எழுதிய 'அன்னா பர்ன்ஸ்' **(Anna Burns)** இந்த ஆண்டுக்கான மேன் புக்கர் விருதினைப் பெறுகிறார்.

5) புதுதில்லியிலுள்ள ‘இந்திய உணவு மற்றும் விவசாய நிறுவனத்தால்’ **(Indian Council of Food and Agriculture)** முதன் முதலாவதாக வழங்கப்படவிருக்கும் உலக விவசாயப் பரிசானது **(World Agriculture Prize)** வேளாண் விஞ்ஞானி M.S. சுவாமிநாதன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

6) ஐ.நா. உணவு மற்றும் விவசாய நிறுவனத்தினால் (FAO) வழங்கப்படும் ‘எதிர்கால கொள்கைக்கான தங்க விருதானது’ (Future Policy Gold Award) இந்தியாவின் முதலாவது முழுமையான இயற்கை விவசாய மாநிலமாக உருவெடுத்துள்ள சிக்கிமுக்கு வழங்கப்பட்டுள்ளது.

7) 2018 ஆம் ஆண்டுக்கான ஜூனியர் ஆசிய வன உயிர் புகைப்படக் கலைஞருக்கான விருதானது **(Junior Assam Wildlife Photographaer Award)** ஜலந்தரைச் சேர்ந்த 10 வயதே நிரம்பிய ‘அர்ஷ்தீப் சிங்’ (Arshdeep Singh) என்ற சிறுவனுக்கு வழங்கப்பட்டுள்ளது. குழாய்களுக்குள் வசிக்கும் ஆந்தைகளை (pipe owls) புகைப்படம் எடுத்ததற்காக இந்த விருதானது இச்சிறுவனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

8) 2008 ஆம் ஆண்டுக்கான சிறந்த வனஉயிர் புகைப்படக் கலைஞருக்கான விருதானது **(Wildlife Photographer Award 2018)** மார்சல் வான் ஊஸ்டனுக்கு (Marsel Van Oosten) வழங்கப்பட்டுள்ளது.

9) பேரிடர் மீட்புப் பணிகளில் ஈடுபடுவோரைச் சிறப்பிக்கும் வகையில் சுதந்திரப் போராட்ட வீரரான நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் பெயரில் விருதானது வழங்கப்படும் **(Netaji Subhash Chandra Bose Award)** என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

10) பொது நிர்வாகத்தில் சிறந்து விளங்கியமைக்காக முதுபெரும் சட்ட அறிஞரான ஃபாலி S. நாரிமனுக்கு **(Fali S. Nariman)** 19வது லால் பகதூர் சாஸ்திரி தேசிய விருதானது வழங்கப்பட்டுள்ளது.

11) சினிமா மற்றும் தொலைக்காட்சி கலைகளுக்கான ஆஸ்திரேலிய அகாடமியின் **(Australian Academy of Cinema and Television Arts)** விருது வழங்கும் விழாவுக்கான சிறந்த ஆசிய திரைப்பட விருதுக்கான பிரிவில் (Best Asian Film Category) இந்தியாவிலிருந்து காலிகுலெயான் (Gali Guleiyan), சஞ்சு மற்றும் நியூட்டன் ஆகிய திரைப்படங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

12) நோபல் பரிசினை முன் மாதிரியாகக் கொண்டு வழங்கப்பட்டு வரும் இலக்கியத்துக்கான நியூ அகாடமி விருதானது **(New Academy Prize in Literature)** மாரிஸ் கான்டேவுக்கு (Maryse Conde) வழங்கப்பட்டது.

13) சுஜாதா கிட்லா (Sujatha Gidla - 55 வயது) முதன் முறையாக எழுதியுள்ள **“Ants among elephants : An Untouchable Family and the Making of**

**Modern"** என்ற புத்தகத்துக்காக அவருக்கு முதலாவது சக்தி பட் புத்தக விருதானது (Shakti Bhatt First Book Prize 2018) வழங்கப்பட்டுள்ளது.

14) ஃபாலி S. நாரிமன் (Fali S. Nariman) அவர்களுக்கு 19-வது சிறந்த பொது நிர்வாகத்துக்கான லால் பகதூர் சாஸ்திரி தேசிய விருதானது வழங்கப்பட்டுள்ளது.

15) சிறப்பான முறையில் நீடித்த வளர்ச்சிக்கான முதலீடுகளை மேம்படுத்துவதற்காக வழங்கப்படும் ஐக்கிய நாடுகளின் விருதானது நமது நாட்டின் முதலீடுகளை ஊக்குவிக்கும் அமைப்பான **'இன்வெஸ்ட் இந்தியாவுக்கு'** (Invest India) வழங்கப்பட்டுள்ளது.

16) பொது நிர்வாகம் மற்றும் மேலாண்மைக்காக வழங்கப்படும் காமன்வெல்த் கூட்டமைப்பின் விருதானது (Commowealth Association for Public Administration and Management Award - CAPAM) இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

17) **ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக்கான விருதுகள்** – 2018

| | |
|---|---|
| **அஸ்மா ஜஹாங்கீர்** | **பாகிஸ்தானின் மறைந்த மனித உரிமைகள் செயற்பாட்டாளர்** |
| **ரெபேக்கா கியூமி** | தான்சானியாவைச் சேர்ந்த மனித உரிமைகள் செயற்பாட்டாளர் |
| **ஜோனியா வாபிச்சனா (Jonia Wapichana)** | பிரேசிலின் முதலாவது உள்நாட்டு வழக்கறிஞர் |
| **Front Line Defenders** | அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த மனித உரிமைகள் அமைப்பு |

18) **உலக அளவில் விவசாயத் துறையில் சிறந்து விளங்குபவர்களுக்கு வழங்கப்படும் விருது** – 2018 **(Global Agriculture Leadership Awards - 2018)**

| | |
|---|---|
| **மீன்வளத்துறையில் சிறந்து விளங்கும் மாநிலத்திற்கான விருது (Best Fisheries State)** | **ஜார்க்கண்ட்** |
| **கால்நடை வளர்ப்பில் சிறந்து விளங்கும் மாநிலத்திற்கான விருது (Best Animal Husbandry State)** | பீஹார் |
| **தோட்டக் கலையில் சிறந்து விளங்கும் மாநிலத்திற்கான விருது (Best Horticultural State)** | நாகாலாந்து |
| **வேளாண்துறையில் சிறந்து விளங்கும் மாநிலத்திற்கான விருது (Best Agricultural State)** | குஜராத் |
| **திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தும் மாநிலத்திற்கான விருது (Program Leadership Award)** | ஹரியானா |
| **சிறப்பான கொள்கை முடிவுகளை** | ஆந்திர முதல்வர் |

| | |
|---|---|
| **நடைமுறைப்படுத்தும் ஆளுமைக்கான விருது (Policy Leadership Award)** | N. சந்திரபாபு நாயுடு |

## நியமனங்கள் & ஆளுமைகள்

**1)** பூடான் நாட்டின் புதிய பிரதமராக 'ட்ரக் நியாம்ரூப் ஷோக்பா' (Druk Nyamrup Tshogpa) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**2)** பன்னாட்டு நிதியத்தின் (IMF) புதிய தலைமைப் பொருளாதார அறிஞராக (Chief Economist) கீதா கோபிநாத் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் ரிசர்வ் வங்கி ஆளுநர் ரகுராம் ராஜனுக்குப் பிறகு இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் இரண்டாவது இந்தியர் இவர் ஆவார்.

**3)** ICICI வங்கியின் தலைமைப் பதவியிலிருந்து சந்தா கோச்சார் இராஜினாமா செய்துள்ளார். சந்தீப் பக்ஷி தலைமைச் செயல் அதிகாரியாகவும் மேலாண்மை இயக்குநராகவும் (MD&CEO) பொறுப்பேற்றுள்ளார்.

4) தேசிய சட்ட உதவி ஆணையத்தின் (National Legal Services Authority of India - NALSA) புதிய செயல் தலைவராக 'மதன் பீமாராவ் லோக்கூர்' (Madan Bhimarao Lokur) நியமிக்கப்பட்டுள்ளார்.

5) புதிய தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகராக R.M. ரவி நியமிக்கப்பட்டுள்ளார்.

6) ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் ஆயுத ஒழிப்பு மாநாட்டின் (UN Conference on Disarmament) நிரந்தர இந்தியப் பிரதிநிதியாகவும் அதன் தூதராகவும் பங்கஜ் சர்மா நியமிக்கப்பட்டுள்ளார்.

7) இந்தியாவின் புதிய சாலிசிட்டர் ஜெனரலாக துஷார் மேத்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

8) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சிக் கழகத்தின் (Council of Scientific and Industrial Research) இயக்குநர் ஜெனரலாகவும் அறிவியல் மற்றும் ஆராய்ச்சித் துறையின் (Department of Scientific and Research) செயலராகவும் Dr. சேகர் மன்டே (Dr. Shekhar Mande) நியமிக்கப்பட்டுள்ளார்.

9) கனடாவின் மதிப்புக்குரிய குடிமகன் அந்தஸ்தானது (Honorary Canadian Citizenship) முதன்முறையாக ஆங் சான் சூ கி (Aung san suu kyi)-க்கு வழங்கப்பட்டுள்ளது.

10) இந்திய புதிய தலைமைப் புள்ளியியலாளராக (Chief Statistician) பிரவீன் ஸ்ரீவத்சவா நியமிக்கப்பட்டுள்ளார்.

## புத்தகங்களும் அதன் ஆசிரியர்களும்

| | |
|---|---|
| **Brief Answers to the Big Questions** | **ஸ்டீபன் ஹாக்கிங்** |
| **Maharana Pratap : The Invincible Warrior** | ரீமா ஹூஜா |
| **Indian Sports : Conversations and Reflections** | விஜயன் பாலா |
| **The Paradoxical Prime Minister : Narendra Modi and His India** | சசி தரூர் |

## முக்கிய தினங்கள்

| தினங்கள் (Days) | நிகழ்வுகள் (Events) | கருத்துரு/முக்கியத்தும் (Themes/Significance) |
|---|---|---|
| **அக்டோபர் 1** | சர்வதேச காஃபி தினம் | "Women in Coffee" |
| | உலக மூத்தோர் தினம் (International Day of Older Persons) | "Celebrating Older Human Rights Champions" |
| | உலக வாழ்விட தினம் (World Habitat Day) | "நகர்ப்புற திடக்கழிவு மேலாண்மை" (Municipal Solid Waste Management) |
| **அக்டோபர் 2** | சர்வதேச அஹிம்சை தினம் | ஐ.நா.வின் அனைத்து உறுப்பு நாடுகளாலும் கொண்டாடப்படும் இந்த தினமானது கல்வி, பொது விழிப்புணர்வு மூலம் அஹிம்சையின் இன்றியமையாமையை எடுத்துரைக்கிறது. |
| | காந்தி ஜெயந்தி | காந்தியடிகளின் 149-வது பிறந்த தினம் |
| **அக்டோபர் 4** | உலக விலங்குகள் தினம் | |
| **அக்டோபர் 5** | உலக புன்னகை தினம் | |
| **அக்டோபர் 8** | இந்திய விமானப்படை தினம் (IAF) | தேசிய பாதுகாப்பில் விமானப் படையின் பங்களிப்பை நினைவு கூறும் தினம் |
| **அக்டோபர் 9** | இந்திய அயலுறவுப் பணி தினம் | |
| | உலக தபால் தினம் | "Imagine you are a letter travelling through time. What message do you wish to convey to your readers?" |
| **அக்டோபர் 11** | சர்வதேச பெண் குழந்தைகள் தினம் | "With Her : A Skilled Girl Force" |
| | உலக கண்பார்வை தினம் | "Eye Care Everywhere" |
| | உலக உடல் பருமன் தினம் | "Its time to end weight stigma" |
| **அக்டோபர் 12** | உலக முட்டை தினம் | |
| **அக்டோபர் 13** | சர்வதேச பேரிடர் குறைப்பு தினம் (International day for disaster reduction) | "பேரிடரால் நிகழும் பொருளாதார இழப்புகளைக் குறைத்தல்" |
| | உலக தர நிர்ணய தினம் (World standards day) | |
| | சர்வதேச கிராமப்புற பெண்கள் | "பாலின சமத்துவத்துக்கான கட்டுமானம், |

| | | |
|---|---|---|
| **அக்டோபர் 15** | தினம் (International day of Rural Women) | சேவைகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு மற்றும் கிராமப்புற பெண்களுக்கு அதிகாரமளித்தல்" |
| | உலக மாணவர் தினம் | |
| | ராஷ்ட்ரிய மகிளா கிசான் திவாஸ் | |
| **அக்டோபர் 16** | உலக உணவு தினம் | "நமது செயல்களே நமது எதிர்காலம் - 2030-ல் பசியற்ற உலகம் சாத்தியம்" |
| **அக்டோபர் 17** | சர்வதேச வறுமை ஒழிப்பு தினம் | "மனித உரிமைகள் மற்றும் சக மனிதர்களை மரியாதையுடன் நடத்தும் உலகினை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும்" |
| **அக்டோபர் 20** | உலக எலும்புப் புரை நோய் தினம் (World Osteoporosis Day) | எலும்புப் புரை நோயினைக் கண்டறிதல், தடுத்தல் மற்றும் அதன் சிகிச்சை பற்றிய உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல். |
| **அக்டோபர் 21** | காவல் துறையினருக்கான நினைவு தினம் (Police Commemoration Day) | காவல் துறையில் தியாகம் செய்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் தினம். |
| **அக்டோபர் 24** | உலக போலியோ தினம் | "Bold steps to End Polio" |
| | ஐக்கிய நாடுகள் அமைப்பு தினம் | "Traditions of Peace and Non-Violence" |
| **அக்டோபர் 24** | உலக தகவல் மேம்பாட்டு தினம் (World Develoment Information Day) | |
| **அக்டோபர் 28** | International Animation Day | |
| **அக்டோபர் 29** | உலக இணைய தினம் (International Internet Day) | |
| **அக்டோபர் 31** | தேசிய ஒருமைப்பாட்டு தினம் / ராஷ்ட்ரிய ஏக்தா திவாஸ் (National Unity Day/ Rashtriya Extra Dines) | சர்தார் வல்லபாய் பட்டேலின் பிறந்த தினம் |
| | உலக சேமிப்பு தினம் (World Savings Day / World Thrift Day) | உலக நாடுகள் மற்றும் தனி நபர்களிடையே சேமிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும். |
| | உலக நகரங்கள் தினம் (World Cities Day) | "சிறந்த நகரம், மேம்பட்ட வாழ்க்கை" (Better City, Better Life) |

- **தேசிய ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு வாரமானது** (Vigilance Awareness week) 2018 **அக்டோபர் 29 முதல் நவம்பர் 3 வரை** அனுசரிக்கப்பட்டது. ***இதன் கருத்துரு : "ஊழலை ஒழிப்போம் - புதிய இந்தியாவைக் கட்டமைப்போம்" (Eradicate corruption - Build A New India).***